# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, யூலை மாதம் 13 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 7.50**

**2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச. வ.- ஓ. 20/2006*

**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தைத் தாபிப்பதற்கும் ; அத்துடன் அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயர்.*

***1.*** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

## பாகம் I

### தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம்

*தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தினைத் தாபித்தல்.*

***2.*** (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் என அழைக்கப்படும் நிறுவகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இந்நிறுவகம் இப்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையுமுடைய கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக விருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

*முகாமைச் சபை.*

***3.*** (1) நிறுவகத்தின் அலுவல்களின் நிர்வாகமும் முகாமையும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய உறுப்பினர்களைக்கொண்ட (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைச்சபையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் -

(i) கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்றவரான ஆள் ;

(ii) பொதுநிர்வாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்றவரான ஆள் ;

(iii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்றவரான ஆள் ; அத்துடன்

(iv) அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்றவரான ஆள் ; அத்துடன்

(ஆ) மொழிகள், இலக்கியம், கல்வி மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் அனுபவம் உடையவர்களும் மற்றும் ஆற்றலை வெளிக்காட்டியுள்ளவர்களுமான ஆட்களிடையே இருந்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஐந்து வேறு உறுப்பினர்கள்.

(3) அமைச்சர், சபையின் உறுப்பினர்களிடையே இருந்து சபையின் தவிசாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் சபை உறுப்பினர்களின் நியமனங்களும் பதவி நியதிகளும் அத்தகைய உறுப்பினர்களுக்கு செலுத்தப்படற்பாலதான ஊதியங்கள், சபையின் கூட்டங்கள் மற்றும் நிறுவகத்தின் இலச்சினை என்பன தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

*நிறுவகத்தின் குறிக்கோள்கள்.*

**4.** நிறுவகம் தாபிக்கப்படுவதற்கான குறிக்கோள்கள் பின்வருவோரை உருவாக்குகின்ற நிறுவகமொன்றாகச் சேவையாற்றுவதற்கானதாகும் :—

(அ) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அத்தகைய அறிவைப் பெற விரும்புகின்றவர்களுக்கு அத்தகைய மொழிகளைக் கற்பித்தலுக்கான தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் ;

(ஆ) எழுத்திலான சட்டத்தினால் தாபிக்கப்படவேண்டிய தேசிய மொழிபெயர்ப்பாளர்கள் சேவை மற்றும் தேசிய உரைபெயர்ப்பாளர்கள் சேவை என்பன கொண்டிருக்க வேண்டிய தகுதிவாய்ந்த சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்கள் ;

(இ) சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களுக்கு மொழிப்பயிற்சி வழங்குவதற்குத் தகைமை வாய்ந்த பயிற்றுநர்கள் ;

(ஈ) பொதுமக்களுக்குப் பயனுறுதிவாய்ந்த சேவைகளை ஏற்பாடுகளுக்காக மும்மொழிகளிலும் ஆற்றல்வாய்ந்த பயிற்றப்பட்ட ஆட்கள்.

*நிறுவகத்தின் பணிகள்.*

**5**. நிறுவகம் பின்வரும் பணிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அறிவைப் பெற விரும்புகின்றவர்களுக்குத் அத்தகைய மொழிகளைக் கற்பிப்பதற்குத் தகுதிவாய்ந்த ஆசிரியர்களை கிடைக்கச் செய்வதன்பொருட்டு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் விரிவான பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல் ;

(ஆ) நிறுவகத்தின் பயன்மிக்க தொழிற்பாட்டிற்காக ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளின் பெறுபேறுகளை பயன்படுத்தும் நோக்குடன் மொழிப்பயிற்சி தொடர்பான விடயத்தின்மேல் அத்தகைய ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகளை நடாத்துதல் ;

(இ) பொருத்தமான ஆட்களுக்கு மொழிகளில் பயிற்சி மற்றும் கற்பித்தலுக்கு ஏற்பாடுசெய்தலும் மற்றும் அத்தகைய பயிற்சி, கற்பித்தலைப் பூர்த்திசெய்வதும் சான்றிதழ்களையும் திப்புளோமாக்களையும் பட்டங்களையும் அளித்தலும் ;

(ஈ) மொழிகளில் கற்பித்தலை மேற்கொள்வதற்கென பயிற்றப்பட்ட ஆளணியினரின் அமைப்பு ஒன்றைக் கட்டியெழுப்புதல் ;

(உ) மொழிகள் தொடர்பற்ற கருமங்களில் தகவற் தேக்கமொன்றைத் தாபித்தல் ;

(ஊ) உரைபெயர்ப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் சுருக்கெழுத்தாளர்கள் போன்ற விசேட வகுதியைச் சேர்ந்த ஆட்களுக்குக் குறித்துரைக்கப்பட்ட மொழிக் கற்கை நெறிகளை சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்துதல் ; அத்துடன்

(எ) சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிசார் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அவற்றிற்கு உதவியளித்தல் மற்றும் மேம்படுத்துதலுடன் அத்தகைய நடவடிக்கைகள் அவசியமானதெனத் தோன்றுமிடத்து சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் செய்யப்படவுள்ள மேம்பாடுகள் மற்றும் மாற்றங்கள் பற்றி இயைபான அதிகாரசபைகளுக்கு விதந்துரை செய்தல்.

நிறுவகத்தின் தத்துவங்கள்.

**6**. நிறுவகம், தனது பணிகளை பயனுற நிறைவேற்றும் நோக்கத்திற்காகப் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான மானியங்களை, கொடைகளை, நன்கொடைகளை, விருப்பாவணக் கொடைகளை ஏற்றுக்கொள்ளுதலும் பெற்றுக்கொள்ளுதலும் அத்துடன் அதன் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் மேம்படுத்துவதில் அவற்றைப் பிரயோகித்தலும் ;

(ஆ) ஏதேனும் கொள்வனவு, மானியம், நன்கொடை, மரணசாதனக் கையுதிர்ப்பு மூலம் அல்லது வேறுவகையில் நிறுவகத்திற்கு உரித்தாக்கக்கூடியவாறான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும், வைத்திருத்தலும் அத்துடன் நிறுவகத்தின் விதிகளுக்கமைய அதை விற்றல், குறித்தொதுக்குதல், கொடுத்துமாற்றுதல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(இ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி நிறுவகத்தின் குறிக்கோள்களைப் போன்ற குறிக்கோள்களை முழுவதாக அல்லது பகுதியளவிற் கொண்டிருக்கும் கல்வி நிறுவனங்களுடனும் வேறு நிறுவனங்களுடனும் ஆளணியினரைக் கொடுத்து மாற்றுவதற்கென, மதியுரைச் சேவைகளுக்கென, ஆராய்ச்சிக்கென, ஆளணியினருக்குப் பயிற்சி அளிப்பதற்கென அல்லது பொதுவாக, அவற்றின் பொதுக் குறிக்கோள்களுக்கு உகந்தனவாறாகக்கூடியனவான அத்தகைய நோக்கங்களுக்கென ஒத்துழைப்பதற்காக உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல் ;

(ஈ) ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடப்புக் கணக்குகளை, சேமிப்புக் கணக்குகளை அல்லது வைப்புக் கணக்குகளை திறந்து பேணுதல் ;

(உ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதல் ;

(ஊ) சபையினால் அங்கீகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்புகளில் அதன் நிதிகளை முதலீடு செய்தல் ;

(எ) நிறுவகத்தின் செயல் நோக்கினுள் வரும் விடயங்கள் பற்றிய அறிக்கைகள், பருவ வெளியீடுகள், கட்டுரைகள் என்பவற்றைச் சேகரித்தல், அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல் ;

(ஏ) நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றுவதுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்குகளை நடாத்துதல் ;

(ஐ) நிறுவகத்தின் அலுவல்களை முகாமைசெய்வது தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(ஒ) நிறுவகத்தின் நோக்கத்துக்காக ஏதேனும் பிணைப் பொறுப்புக்களுடனோ அல்லது வேறுவகையாகவோ பணத்தைத் திரட்டுதல் அல்லது கடன்பெறுதல் அத்துடன் சபை பொருத்தமானதெனக் கருதுகின்ற அத்தகைய முறையின் நிறுவகத்தின் ஏதேனும் தனிசை அல்லது கடப்பாட்டை உறுதிசெய்தல் அல்லது நிறைவேற்றுதல் ;

(ஓ) நிறுவகத்தின் செயல்நோக்கினுள் வருகின்ற எல்லா விடயங்களிலுமான இயைபுடைய வெளியீடுகளினதும் ஆராய்ச்சி அறிக்கைகளினதும் நூலகம் ஒன்றைத் தாபித்தல் ;

(ஔ) நிறுவகத்தின் பயிற்சியளிப்புக்கு விண்ணப்பங்களைக் கோருவதுடன், பயிற்சிபெறுவதற்குத் தகவுடைய ஆட்களைத் தெரிவுசெய்தலும் ;

(க) நிறுவனங்களின் நோக்கங்களை ஒத்த நோக்கங்களைக் கொண்ட ஏனைய நாடுகளில் உள்ள நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் தொழில் உறவுகளை விருத்திசெய்தல் ; அத்துடன்

(ங) நிறுவகத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்கள் மற்றும் காரியங்களை செய்தல்.

கல்விச் சபை.

**7**. இதனகத்துப்பின்னர் "கல்விச் சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிறுவகத்தின் கல்விச் சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) நிறுவகத்தின் தவிசாளர் ;

(ii) *நிறுவகத்தின் பணிப்பாளர் - தலைமையதிபதி ;*

(iii) *அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஆணையாளர் ;*

(iv) *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட எல்லாப் பல்கலைக் கழகங்களினதும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரிவுகளினதும் மற்றும் மொழியியல் பிரிவுகளினதும் பிரிவுத் தலைவர்களிடையேயிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் சபையினால் நியமிக்கப்பட்ட ஆறு பிரிவுத் தலைவர்கள்.*

**8.** கல்விச் சபையானது நிறுவகத்திற்குப் பொறுப்பானதாதல் வேண்டும் என்பதுடன், பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :- *கல்விச் சபையின் தத்துவங்கள்.*

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நிறுவகத்தின் கல்விசார் செயற்பாடுகளுடன் தொடர்புபடக்கூடியவாறான அத்தகைய விடயங்கள்மீது நிறுவகத்திற்கு மதியுரை வழங்குதல் ;

(ஆ) நிறுவகத்தின் விதிகளுக்கு இணங்கப் பரீட்சைகளை நடாத்துதலும் மற்றும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளவர்களும் நிறுவகம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியுள்ளவர்களும் ஆன ஆட்களை நிறுவகத்தின் திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்களை அளிப்பதற்குத் தகுதியுடையவர்களெனச் சபைக்கு விதப்புரை செய்தல் ;

(இ) சபையினால் அதற்குக் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விடயங்கள் மீதான அறிக்கையைக் கருத்திற்கொள்ளல் ;

(ஈ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் ஆய்வு, பயிற்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான கற்கைநெறிகளுடன் தொடர்புபட்ட எல்லா விடயங்கள் மீதான விதப்புரைகள் மற்றும் அறிக்கைகளை ஆக்குதலும் மற்றும் அவற்றைச் சபைக்கு முன்வைத்தலும் ;

(ஊ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் ஆய்வு அல்லது பயிற்சித்திட்டங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான கற்கை நெறிகளுக்கு மாணவர் அனுமதிக்காக விதிக்கப்பட வேண்டிய தேவைப்பாடுகளைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஊ) நிறுவகத்தால் நடாத்தப்படும் ஆய்வு, பயிற்சித்திட்டம் மற்றும் பரீட்சைகளுக்கான கற்கைநெறிகளுடன் தொடர்புபட்ட விதிகளை ஆக்குதலும் அத்தகைய விதிகளை சபைக்கு சமர்ப்பித்தலும் ;

(எ) நிறுவகத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளில் பரீட்சகர்கள் நியமனங்களுக்காகப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) சபைக்கு விதிகளையும், ஆட்சேர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும், நிறுவகத்தின் கல்விசார் பணியாட்டொகுதியின் நியமனம், பதவிநீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன தொடர்பிலான நடவடிக்கைமுறைகளையும் அவர்களின் வேதனங்கள், ஊதியங்கள், படிகள், கட்டணங்கள் மற்றும் அவர்களின் வேலை நேரங்கள், விடுமுறைகள், லீவு என்பவற்றையும் விதந்துரைத்தல் ;

(ஐ) நிறுவகத்தால் அளிக்கப்படும் புலமைப்பரிசில்கள், பொருள்உதவிகள், உபகாரச் சம்பளங்கள், பதக்கங்கள் மற்றும் பரிசில்கள் என்பவற்றை வழங்குவதற்கு ஏற்புடைத்தாக இருக்கவேண்டிய நிபந்தனைகளைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஒ) புலமைப்பரிசில்கள், பொருள் உதவிகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகளுக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளை திருப்திசெய்துள்ள ஆட்களை சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஓ) கல்விச் சபையின் பிரதிநிதிகளைக்கொண்ட செயற்குழுக்களை சபையின் அங்கீகாரத்துடன் நியமித்தல் ; அத்துடன்

(ஔ) கல்விச்சபையின் கூட்டங்கள் தொடர்பிலும் மற்றும் அத்தகைய கூட்டங்களில் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துவதற்காகவும் விதிகளை ஆக்குதல்.

(2) சபை அல்லது 1 ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கல்விசார் விடயம் தொடர்பில் எந்த அலுவலருக்குத் தத்துவங்கள் கையளிக்கப்பட்டுள்ளனவோ அந்த எவரேனும் அலுவலர் கல்விச் சபையின் விதப்புரையைப் பெறாமல் அந்த விடயத்தின்மீது முடிபு எதனையும் எடுத்தலாகாது. சபையின் அல்லது அத்தகைய அலுவலரின் முடிபானது கல்விச் சபையின் விதப்புரைக்கு முரணானதாக இருக்குமிடத்து, சபை அல்லது அத்தகைய அலுவலர் கல்விச் சபையின் விதப்புரைக்கு இணங் காமைக்கான காரணங்களைக் காட்டுதல் வேண்டும்.

(3) கல்விச் சபையின் செயல், விதப்புரை அல்லது அறிக்கை யெதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருப்ப தன் காரணமாக அல்லது அதற்கான எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளதன் காரணமாக மட்டும் வலிதற்றதாதலாகாது.

## பாகம் II

### நிறுவகத்தின் பணியாட்டொகுதி

**9.** (1) அமைச்சர், முகாமைத்துவம் என்ற துறையில் சிறப்புப் பெற்றவர்களான ஆட்களிடையேயிருந்து சபையின் கலந்தாலோ சனையுடன் நிறுவகத்திற்கான பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை நியமித்தல் வேண்டும். *நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி.*

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியானவர் சபையின் பணிப்புரைகளுக்கு அமைவாக —

(அ) உள்ளூர் மற்றும் சர்வதேசப் பங்காளர்களுடன் வலைப் பின்னல் ஒன்றைத் தாபித்தல் ;

(ஆ) நிறுவகத்தின் அலுவல்களை நியமிப்பதற்குப் பொறுப் பானவராக இருத்தல் ;

(இ) நிறுவகத்தின் பணியாட்டொகுதியின் நியமனம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்குப் பொறுப்பானவராக இருத்தல் ;

(ஈ) சபையின் செயலாளராக இருத்தல் ;

(உ) சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்புள்ளவராக இருத்தல் ; அத்துடன்

(ஊ) சபையினால் அவருக்கு குறித்துரைக்கப்படக்கூடியவா றான அத்தகைய வேறு பணிகளை நிறைவேற்றுதல்,

வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி சபையின் ஏதேனும் கூட்டங் களில் சமுகமளிப்பதற்கும் தனது கருத்துக்களை வெளியிடுவதற் கும் உரித்துடையவராதல் வேண்டும், எனினும் அத்தகைய கூட்டங் களில் வாக்களிப்பதற்கு அவர் உரித்துடையவராக இருத்தல் ஆகாது.

*நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்கான நியமனங்கள் முதலியன.*

**10**. நிறுவகம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாகப் பின் வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் பணியாட் டொகுதி மேல் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோ கிப்பதற்கும் அது அவசியமானதெனக் கருதுகின்ற வாறான அத்தகைய பணியாட்டொகுதியை நியமித்தல் ;

(ஆ) பணியாட்டொகுதியின் உறுப்பினர் எந்த வீதத்தில் ஊதியமளிக்கப்பட்ட வேண்டுமோ அந்த வீதத்தைத் தீர் மானித்தல் ; அத்துடன்

(இ) நிறுவகத்தின் பணியாட்டொகுதியின் சேவைக்கான நியதி நிபந்தனைகளைத் தீர்மானித்தல்.

*பகிரங்க அலுவலர்களை நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்.*

**11.** (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அவ்வலுவலரினது சம்மதத்துடனும் மற்றும் இயைபான அமைச்சு அல்லது அமைச்சுக்களினது செயலாளரினது சம்மதத்துடனும், சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்ற விடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்ற மாற்றங் களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு அரசாங்கத் திற்குச் சேவையாற்றுவதற்கு அரசாங்கத்துடன் ஒப்பந்தஞ் செய்துகொண்ட எவரேனும் ஆளை நிறுவகமானது ஊழியத்துக்க மர்த்தியுள்ளவிடத்து, அவ்வாளினால் நிறுவகத்துக்குச் செய்யப் பட்ட ஏதேனும் சேவைக்காலப்பகுதியானது அத்தகைய ஒப்பந்தங் களின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங் கத்துக்குச் செய்யப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) சபையின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் உயர்கல்வி நிறுவகத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், அத்தகைய அலுவலரினது அல்லது சேவையாளரினது சம்மதத்துடனும் அத்துடன் அந்த உயர் கல்வி நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினது சம்மதத்துடனும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது சபையினாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரினாலும் உடன்படக்கூடியவாறான ஓய்வூதிய சகாய நிதிய உரிமைகள் அடங்கலாக அத்தகைய நிபந்தனைகள்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அவர் அத்தகைய பணியாட்டொகுதியின் எவரேனும் வேறு உறுப்பினர் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராக இருத்தல் வேண்டும்.

(7) இப்பிரிவில் "உயர்கல்வி நிறுவனம்" மற்றும் "பிரதான நிறைவேற்று அலுவலர்" என்ற சொல்லமைப்புக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தால் குறித்துரைக்கப்பட்ட அந்தந்தப் பொருள்களைக்கொண்டிருத்தல்வேண்டும்.

## பாகம் III

### நிதி

*நிறுவகத்தின் நிதியம்.*

**12.** (1) நிறுவகமானது அதற்கெனச் சொந்தமாக நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிறுவகத்தின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் ஒதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) நிறுவகமானது, அதன் தத்துவங்கள் பணிகளைப் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் நிறுவகத்தினால் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(இ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி எத்தன்மைத்தானதுமான மூலத்திலிருந்து நன்கொடைகள், மானியங்கள், அளிப்புக்கள் என்றவகையில் பேரவையினால் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) நிறுவகம் அதன் முதலீடுகளிலிருந்து பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்,

(3) நிறுவகத்தினால், இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள் மற்றும் பணிகளை பிரயோகித்தலிலும் நிறைவேற்றுதலிலும் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ள அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*நிதியாண்டும் நிறுவகத்தின் கணக்குகளின் கணக்காய்வும்.*

**13.** (1) நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) சபையானது, நிறுவகத்தின் வரவு, செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

*சபையின் தத்துவங்களை சபையின் தவிசாளருக்குக் கையளித்தல்.*

**14.** (1) சபை, இவ்வுட்பிரிவின் கீழான அதன் தத்துவங்கள் தவிர்ந்த ஏதேனும் அதன் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளைச் சபையின் தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் கையளிப்பைப் பெற்ற சபையின் தவிசாளர் சபையின் பணிப்புரைகளுக்கு அமைய அத்தகைய தத்துவத்தை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றல் வேண்டும்.

*மதியுரைச் சபை.*

**15.** (1) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப் படும்) மதியுரைச் சபையொன்று இருத்தல் வேண்டும். அது, நிறுவகத்தை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைக ளின் பயனுறுதி மீது நிறுவகத்துக்கு மதியுரை வழங்குதல் வேண்டு மென்பதுடன், நிறுவகம் தொடர்பான விடயங்கள் பற்றியும் நிறுவ கத்தின் அபிவிருத்தி பற்றியும் கலந்துரையாடுவதற்கான அவை ஒன்றை ஏற்படுத்துதலும் வேண்டும்.

(2) சபையானது, தேசிய ஒருங்கிணைப்பு என்னும் விடயத்துக் குப் பொறுப்பான அமைச்சரினால், மொழி, இலக்கியம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களும் மற்றும் அத்தகைய துறைகளில் சிறப்புபெற்றவர்களுமான ஆட்களுக் கிடையேயிருந்து நியமிக்கப்பட்ட ஐந்து ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமிப்பதற்கு சபைக்கு உள்ள தத்துவம்.*

**16.** சபை, நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுதற்கும் தேவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கை யினை நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமிக்கலாம்.

*சபையின் பணிப்புரைகள்.*

**17.** தேசிய ஒருங்கிணைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சர், சபையுடனான ஆலோசனையுடன், காலத்துக் குக்காலம் சபையால் அதன் தத்துவங்களையும், பணிகளையும்

அவை கொள்கை விடயங்களைத் தொடர்புறுத்தும் அளவிற்குப் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுதற்கும் என அத்தகைய பொதுவான அல்லது விசேடமான எழுத்திலான பணிப்புரைகளை வழங்கலாம் என்பதுடன், அத்தகைய எல்லா பணிப்புரைகளுக்கும் பயனுறுதியளித்தல் சபையின் கடமையாதலும் வேண்டும்.

*சபையின் உறுப்பினர்கள் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்.*

**18.** சபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அதிகார சபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாதல்.*

**19.** நிறுவகமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*இரகசியம் பற்றிய வெளிப் படுத்துகை.*

**20.** (1) சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அத்துடன் நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் அவர்களது கடமைகளை ஏற்பதற்கு முன்னர் நிறுவகத்தின் பணிகள் சார்ந்த எல்லா விடயங்கள் தொடர்பிலும் இரகசியத்தை அனுசரிப்பதற்கு தம்மைப் பிணித்து வெளிப்படுத்துகையொன்றிற்கு கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகையின் மூலம் :—

(அ) அவ்வாறு செய்யுமாறு சட்ட நீதிமன்றத்தால் தேவைப்படுமிடத்து ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்காக,

தவிர அவரது பணிகளைப் புரிகையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய ஏதேனும் விடயத்தை வெளியிடாதிருப்பதற்கு அத்தகைய வெளிப்படுத்துகையின் மூலம் தம்மைப் பிணித்தலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அவரது பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவரால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கமொன்றைத் தவிர வேறேதேனும் நோக்கத்திற்காக எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்துகின்ற சபை உறுப்பினர் ஒருவர் அல்லது நிறுவகத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவராலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**21.** (1) அமைச்சரானவர், எக்கருமங்கள் இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் தேவைப்படுத்தப்பட்டுள்ளனவோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளனவோ, அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**22.** (1) அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம், நிறுவனத்தின் ஏதேனும் நோக்கங்களுக்காகத் தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய நோக்கம், அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அந்நோக்கத்துக்காக அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடை அல்லது குத்தகை கொடுக்கப்படலாமோ அந்நோக்கமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அக்கட்டளையின் ஏற்பாடுகள் நிறுவகத்துக்கான அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடையொன்றுக்கு அல்லது குத்தகையொன்றுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும். *அசைவுள்ள மற்றும் அசைவற்ற அரச ஆதனம் இரண்டும் நிறுவகத்துக்குக் கிடைக்கக் கூடியதாகக் கருதப்படுதல்.*

(2) அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம், நிறுவகத்தின் ஏதேனும் நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆதனத்தின்மீது அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையுமுடைய அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் நிறுவகத்திற்குக் கைமாற்றி அதற்கு உரித்தாக்கலாம்.

**23.** சபையானது, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் அவ்வாண்டுக்கான நிறுவகத்தின் செயற்பாடுகள் பற்றி அறிக்கையொன்றை வெளியிட வேண்டும் என்பதுடன், அவ் அறிக்கை அங்கீகாரத்திற்காக அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதன்மேல் அத்தகைய அறிக்கையானது பாராளுமன்றத்திற்கு முன்னர் இடப்படுதல் வேண்டும். *ஆண்டறிக்கை.*

**24.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**25.** இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய — *பொருள் கோடல்.*

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்று பொருளாவதோடு ஏதேனும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் நேரொத்த அல்லது இவற்றுக்கு ஒத்த தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அத்துடன் நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் சட்டத்தினால்

அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாணசபை என்று பொருளாகும் ; அத்துடன்

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருளாகும்.

**அட்டவணை** (பிரிவு 3)

**சபை உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள்**

1. ஆளொருவர் –

(அ) பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினராகவிருப்பின் அல்லது உறுப்பினராகவரின் ;

(ஆ) இலங்கைப் பிரசையாக இல்லாதிருப்பின் அல்லது இல்லாதொழிந்தால் ;

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ்ச் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ;

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு உட்பட்டவராயிருப்பின் அல்லது உட்பட்டவராயிருந்திருப்பின் ; அல்லது

(உ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306 ஆம் பிரிவு மற்றும் 303 ஆம் பிரிவின்கீழான ஏற்பாடுகளின்கீழ்க் கையாளப்பட்டிருந்தவராயிருப்பின்,

சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

**2**. சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பின் மூலம், பதவி விலகல் மூலம் அல்லது அகற்றுதல் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவி

வகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டிருந்தாலொழிய மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும் :

ஆயின், இறப்பின்மூலம், பதவிவிலகல் மூலம் அல்லது அகற்றுதல் மூலம் பதவியை வறிதாக்கியுள்ள உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

**3.** அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலமும் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காகவும் சபையின் வேறு எவரேனும் உறுப்பினரால் பதவியிலிருந்து அகற்றலாம். இப்பந்தியின் கீழ் எவ்வுறுப்பினர் தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அவ்வுறுப்பினர் கட்டளையானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியன்று பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

**4.** சபையின் உறுப்பினரொருவர், அமைச்சருக்கு அப்பொருள்பட முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, அமைச்சரினால் எழுத்தில், அது ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

**5.** சபையின் எவரேனும் உறுப்பினரின் இறப்பின் மூலம், பதவிவிலகல் மூலம் அல்லது அகற்றுதல் மூலம் பதவி வறிதாக்கப்படும் பட்சத்தில், அமைச்சர் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம். அத்தகைய உறுப்பினரின் இடத்திற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனுமாள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

**6.** சபையின் உறுப்பினரொருவர் மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்குச் சுகவீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அத்தகைய இயலாமை பற்றி எழுத்தில் அமைச்சருக்கு அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அதன்மேல் அமைச்சர் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய காலப்பகுதியின்போது அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோராளை நியமிக்கலாம்.

**7.** சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

**8.** (1) சபையின் தவிசாளர் சமுகமாயிருப்பின், சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைவகித்தல் வேண்டும். தவிசாளர், அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கு வராதிருப்பின் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்தில் தலைமை வகிக்கவெனச் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தலும் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமை வகிக்கின்றவர் அவரது சொந்த வாக்குடன் சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(4) இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமையச் சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கொண்டு நடாத்துதலையும் ஒழுங்குபடுத்தலாம்.

**9**. சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், சபையில் ஏதே னும் வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

**10**. (1) நிறுவகத்தின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கவும், வடிவமைக்கவும்படலாம் என்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(2) நிறுவகத்தின் இலச்சினையானது காலத்துக்குக்காலம் சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் இலச்சினையானது, சபையின் அனுமதியின்றியும் நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் சபையின் உறுப்பின ரொருவர் முன்னிலையிலன்றியும் எத்தகையதுமான எச்சாதனத்திலும் அல்லது ஆவணத்திலும் பொறிக்கப்படுதலாகாது. அத்துடன் அவர்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையானது, எச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் நிறுவகத்தின் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதோ அச்சாதனத்தின் அல்லது ஆவணத்தின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

**11**. (1) தவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சர் அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கு கெனச் சபையின் வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(2) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக தவிசாளரை, தவிசாளர் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) தவிசாளர், அமைச்சருக்கு அப்பொருள்பட முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது தவிசாளர் பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம். அத்தகைய பதவி விலகலானது அமைச்சரினால் எழுத்தில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(4) (2) ஆம், (3) ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு அமையத் தவிசாளரின் பதவிக்காலமானது சபையில் அவரின் உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*